**இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்கும் - 2022**

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் (“ஆணைக்குழு”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளின்படி, ஆணைக்குழுவின் செயற்பாடுகள், தேறிய செயற்பாட்டுச் செலவினத்திற்காக செஸ் நிதியத்திலிருந்து மாற்றீடு செய்யப்பட்ட தொகையினை கணக்கிலெடுப்பதற்கு முன்னர் ரூபா.331.2 மில்லியன் பற்றாக்குறையை ஏற்படுத்தியிருந்தன. முன்னைய ஆண்டின் நிதிப் பற்றாக்குறை ரூபா.352.5 மில்லியன் ஆகும். சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிப் பற்றாக்குறை ரூபா.21.3 மில்லியன் அல்லது 6 சதவீதம் குறைவதற்கான முக்கியக் காரணம், மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் நிதித்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மானியம் ரூபா.67.4 மில்லியன் அதிகரித்தமை ஆகும்.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின், முக்கிய வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2021 | 2022 | வேறுபாடு சதவிகிதத்தில் |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | % |
| **ஆணைக்குழுவின், வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 1,820,617 | 717,743 | (60.5) |
| அரசாங்க மாணியம் (FSMP) | 104,804,128 | 172,252,739 | 64.3 |
| **ஆணைக்குழுவின் செலவினம்** | | | |
| பதவியணியினர் சம்பளம் | 148,721,963 | 160,983,569 | 8.2 |
| பதவியணியினர் நலனோம்பல் மற்றும் பிற பதவியணியினர் தொடர்பான கொடுப்பனவுகள் | 30,933,949 | 37,965,470 | 22.7 |
| பதவியணியினர் வாகன கொடுப்பனவு | 26,662,653 | 25,881,000 | (2.9) |
| பதவியணியினர் மருத்துவ செலவுகள் மற்றும் காப்புறுதிச் செலவினம் | 15,350,619 | 16,113,521 | 4.9 |
| வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் பிரயாணங்கள் | 0 | 7,081,485 | 100 |
| வாடகை மற்றும் வாகன நிறுத்துமிட வாடகை | 101,143,670 | 110,895,458 | 9.6 |
| மூலதனச் சந்தை அபிவிருத்திச் செலவினம் - மொத்தம் | 55,241,934 | 50,328,063 | (8.9) |
| • மூலதனச் சந்தையும் உற்பத்திப்பொருள் அபிவிருத்தியும் | 14,862,714 | 19,050,659 | 28.1 |
| • பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 24,840,257 | 10,278,137 | (58.6) |
| • கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1,802,431 | 1,678,495 | (6.8) |
| • சர்வதேச அங்கத்துவக் கட்டணம் – IOSCO | 4,210,388 | 7,334,807 | 74.2 |
| • பிரச்சாரம் மற்றும் விளம்பரம் | 146,664 | 147,015 | 0.2 |
| • சந்தை ஆராய்ச்சிக் கிரயம் | 9,349,152 | 11,820,060 | 26.4 |

(அ) உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட நிதித்துறை நவீனப்படுத்தல் செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக, ஏறத்தாழ ஐக்கிய அமெரிக்க டொலர் 10 மில்லியன் தொகையை ஆணைக்குழு பெற தக்கதாக உள்ளது; பெறுபேற்று அடிப்படை நிதியுதவியின் ஒரு பகுதியாக USD 2 மில்லியன் மற்றும் முதலீட்டு அடிப்படையிலான நிதியுதவியின் ஒரு பகுதியாக USD 8 மில்லியன். மீளாய்வாண்டின் இறுதியில், செயற்திட்டத்தின் பெறுபேற்று அடிப்படையிலான நிதியுதவியின் ஒரு பகுதியாக ரூபா.369.30 மில்லியனை (2019 இல் ரூபா.81,124,254, 2020 இல் ரூபா 11,720,560, 2021 இல் ரூபா.104,804,128 மற்றும் 2022 இல் ரூபா.171,674,294 ) மொத்தமாக ஆணைக்குழு பெற்றது. மேலும், FSMP இன் முதலீட்டு அடிப்படையிலான நிதியுதவியின் கூறுகளின் கீழ், உள்ளூர் விற்பனையாளர்களுக்கு LKR இல் செலுத்துவதற்காக 107,650 அமெரிக்க டாலர்களை கமிஷன் திரும்பப் பெற்றுள்ளது மற்றும் 31 டிசம்பர் 2022 இல் வெளிநாட்டு விற்பனையாளர்களுக்கு 197,303 அமெரிக்க டாலர்களை நேரடியாக செலுத்தப்பட்டது.

(ஆ) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான மூலதனச் சந்தை மற்றும் தயாரிப்பு அபிவிருத்திச் செலவினம் ரூபா. 19.05 மில்லியனாகவும், முந்தைய ஆண்டில் இது ரூபா.

14.86 மில்லியனாகவும் இருந்தது, இது மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா. 4.19 மில்லியன் அல்லது 28 சதவீதம் அதிகரிப்பைக் காட்டுகின்றது. எவ்வாறாயினும், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான பொது விழிப்புணர்வு திட்டச் செலவு ரூபா. 10.27 மில்லியன் மற்றும் முந்தைய ஆண்டில் ரூபா. 24.84 மில்லியனாக இருந்தது, இது மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா. 14.57 மில்லியன் அல்லது 59 சதவீத குறைவை பிரதிபலிக்கிறது. மேலும், மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கான மொத்த மூலதனச் சந்தை மேம்பாட்டுச் செலவு ரூபா. 50.32 மில்லியன் மற்றும் முந்தைய ஆண்டில் ரூபா. 55.24 மில்லியனின் இது மதிப்பாய்வாண்டில் ரூபா. 4.92 மில்லியன் குறைவை பிரதிபலிக்கிறது.

(இ) 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் இன் பிரிவு 156 இன் படி, பிணையங்கள் சந்தையை மேம்படுத்தும் நோக்கத்திற்காக, ஆணைக்குழுவின் முகாமை, நிர்வாகம் மற்றும் செயல்பாடுகளால் ஏற்படும் அனைத்து செலவினங்களையும் பூர்த்தி செய்யவும் ஆணைக்குழுவின் செயல்பாடு, மற்றும் அதன் கடமைகள் மற்றும் பிற நோக்கங்களை நிறைவேற்றுதல் நோக்கத்திற்காகவும் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட செஸ்ஸைப் பயன்படுத்துவதற்கு இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஆணைக்குழுவின் செலவுகளுக்காக ரூபா. 331.26 மில்லியன் செஸ் நிதியிலிருந்து மாற்றப்பட்டது. ஆணைக்குழுவின் மொத்த செலவு ரூபா. 542.68 மில்லியன் மற்றும் ரூபா.50.32 மில்லியன் அல்லது மொத்த செலவினத்தில் 9.2 சதவீதம் மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் மூலதன சந்தை மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விசாரணைகளை நடத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பிரிவு 16(ஆர்) இன் படி, ஆணைக்குழுவானது சந்தை நிறுவனம், சந்தை இடைத்தரகர், பதிவுசெய்யப்பட்ட நபர், பட்டியலிடப்பட்ட பொது கம்பனி, பட்டியலிடப்பட்ட வெளிநாட்டு நிறுவனம் ஆகியவற்றின் எந்தவொரு நடவடிக்கையையும் விசாரித்து விசாரணைகளை நடத்த வேண்டும். கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின்படி விசாரணைகளின் முன்னேற்றம் பின்வருமாறு. | காலப்போக்கில், விசாரணை செயல்முறை நெறிப்படுத்தப்பட்டது மற்றும் நிலுவையில் உள்ள விசாரணைகளை விரைவாக முடிக்க காலவகாசம் வழங்கப்பட்டது. ஆண்டின் தொடக்கத்தில், முழு விசாரணைகள், ஆரம்ப விசாரணைகள், புகார்கள் மற்றும் பிற சிறப்புப் பணிகள் அடங்கிய 70 விஷயங்கள் நிலுவையில் இருந்தன. மேலும், வருடத்தில் 27 விடயங்களை (25 முழுமையான | விசாரணை செயல்முறையை மேலும் விரைவுபடுத்த வேண்டும். |

| விசாரணையின் தன்மை | 2022.1.01 இல் | 2022 இல் பெறப்பட்டவை | 2023 ஜூலை 21 இல் முடிவடைந்தவை | 2023 ஜூலை 21 இல் முடிக்க வேண்டியவை |
|---|---|---|---|---|
| பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் பங்குகளை உள்ளக கையாளுகை | 14 | 7 | 9 | 12 |
| பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் பங்குகளில் விலை/சந்தை கையாளுதல் | 26 | 12 | 14 | 24 |
| விலை/சந்தை | 5 | 1 | 0 | 6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கையாளுதல் மற்றும்/அல்லது பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் பங்குகளை உள்ளக கையாளுகை | | | | | விசாரணைகள் மற்றும் இரண்டு சிறப்புப் பணிகள்) ஆரம்பித்துள்ளது.<br>• 21 ஜூலை 2023 நிலவரப்படி மேலே உள்ள 47 விஷயங்களை ஆணைக்குழு முடித்திருந்தது.<br>• ஆணைக்குழு அதன்படி, 21 ஜூலை 2023 நிலவரப்படி 50 விசாரணைகள் உள்ளன. |
| முன்னிலை இயக்கம் | 3 | 4 | 2 | 5 | |
| கையகப்படுத்துதல் மற்றும் இணைத்தல் குறியீட்டின் மீறல் | 2 | 0 | 1 | 1 | |
| ஏனைய மீறல்கள் | 1 | 1 | 0 | 2 | |
| மற்றொரு ஒழுங்கு அமைப்பு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன | 15 | 0 | 15 | 0 | |
| சிறப்பு பணிகள் / புகார்கள் | 4 | 2 | 6 | 0 | |
| **மொத்தம்** | **70** | **27** | **47** | **50** | |

| | | |
|---|---|---|
| (ஆ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புலனாய்வு கையேட்டின் படி, புகார் அல்லது பரிந்துரையின் மீது விசாரணை தேவையா என்பதை தீர்மானிக்க கண்காணிப்பு மற்றும் விசாரணைக் குழு இருந்தது. மேலும், விசாரணையின் முடிவுகள் குழுவின் பரிந்துரையுடன் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டன. எவ்வாறாயினும், 2021 டிசம்பர் 14 அன்று நடைபெற்ற 457வது கூட்டத்தில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கண்காணிப்பு/விசாரணை அமுலாக்கற் செயல்முறைப் பகுப்பாய்வு விளக்கப்படத்தில் அத்தகைய வழிமுறை சேர்க்கப்படவில்லை. அதற்கிணங்க, ஒவ்வொரு முறைப்பாடும்/பரிந்துரையும் விசாரணைப் பிரிவினால் விசாரிக்கப்பட வேண்டும் என்பது கவனிக்கப்பட்டது.<br>எனவே, ஆணைக்குழுவின் மறுஆய்வுக்கு முன், விசாரணை மறுஆய்வு செயல்முறையை மேலும் விரைவுபடுத்துவதற்கு, எந்தெந்த விஷயங்களுக்கு விசாரணை தேவை என்பதைத் தீர்மானிக்க, ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட நிர்வாக் உறுப்பினர்கள் அடங்கிய விசாரணைக் கண்காணிப்புக் குழுவை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. விசாரணைச் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுடன் விசாரணை அறிக்கைகளைப் பற்றி விவாதிக்கவும், அதன் பரிந்துரைகளை ஆணைக்குழுவின் இறுதி ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கவும், ஆணைக்குழுவிற்கு தகவலறிந்த முடிவுகளை எடுக்க உதவும். | விசாரணை செயல்முறையை சீராக்குவதன் முக்கியத்துவம், நிலுவையில் உள்ள விசாரணைகளின் எண்ணிக்கை மற்றும் அதனை சரியான நேரத்தில் முடிவுக்கு கொண்டு வருதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, 2023 ஜூலை 14 அன்று நடைபெற்ற ஆணைக்குழுவின் 487 வது கூட்டத்தில் ஆணைக்குழுவின் முடிவின்படி மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மேற்பார்வைக் குழு அமைக்கப்பட்டது. | புதிய குழுவின் மேற்பார்வையுடன் விசாரணை மறுஆய்வு செயல்முறையை மேலும் விரைவுபடுத்த வேண்டும். |

## 3.2 மனித வள (HR) முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இயக்குநர் மூலதன சந்தை அபிவிருத்தி, இயக்குநர் கண்காணிப்பு, இயக்குநர சட்டம், இயக்குநர் மனித வளம் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயக்குநர், ஒன்பது உதவி இயக்குநர்களில் மூன்று பேறும், ஒன்பது மூத்த முகாமையாளர்களில் ஐந்து பேறும், பதினாறு முகாமையாளர்களில் ஆறு பேறும், இருபத்தி இரண்டில் மூத்த உதவி முகாமையாளர்களில் ஒன்பது பேறும் மற்றும் 49 உதவி முகாமையாளர்களில் 20 பேறும் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் படி 2023 ஜுலை 25 வரையான கணிசமான காலத்திற்கு காலியாக இருந்தன. முக்கிய முகாமையாளர் பதவிகள் நிறப்படாமையானது ஆணைக்குழுவின் நடைமுறைச் செயல்பாட்டை பாதித்திருக்கும். | புதிய ஆணைக்குழு அறிக்கையிடல் காலத்தில் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்தது. புதிய சட்டத்தின் கீழ் மேம்பட்ட செயல்திறனை வழங்குவதற்கு, பொருத்தமான சிறப்புத் திறன் மற்றும் திறன்களைக் கொண்டவர்களை ஈர்க்கவும், ஊதியம் பெறவும், முதலீடு செய்யவும் வேண்டும் என்று ஆணைக்குழு கருதுகிறது.<br>மேலும், 2021 மார்ச் முதல் அடுத்த 5 ஆண்டுகளுக்குள் ஆணைக்குழுவின் செயல்பாடுகளைச் செய்வதற்குத் தேவையான மனித வளங்களின் மிகவும் சிறப்பு வாய்ந்த தன்மையைக் கருத்தில் கொண்டு பணியாளர்களின் எண்ணிக்கையை 96 இல் இருந்து 147 ஆக உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டதை ஆணைக்குழு கவனத்தில் கொண்டது. வெற்றிடங்கள் விளம்பரப்படுத்தப்பட்டு, மறு விளம்பரம் செய்யப்பட்டு, நேர்காணல்கள் பலமுறை நடத்தப்பட்டாலும், பொருத்தமானவர்களைச் தெறிவுசெய்தல் கடினமாகவுள்ளது. தலைமை டிஜிட்டல் அதிகாரி, உதவி இயக்குநர் மனித வள இயக்குநர் சட்ட இயக்குநர் மற்றும் உதவி முகாமையாளர் ஆகிய பதவிகளை நிரப்புவதற்கு கடந்த காலங்களில் நேர்காணல்கள் நடத்தப்பட்டன. | மீதமுள்ள வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். |
| (ஆ) ஆணைக்குழுவில் இணைக்கப்பட்ட அதிகாரி ஒருவர் 19 ஏப்ரல் 2016 முதல் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். எனினும், போக்குவரத்துக் கொடுப்பனவுகள் மற்றும் இதர சலுகைகள் தவிர்ந்து அவரது மாதாந்த மொத்த சம்பளத்தில் பாதிக்கு சமனான தொகையானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபனச் சட்டத்தின் துணைப்பிரிவு 31.11 இற்கு முரணாக செலுத்தப்பட்டது. 2016 ஏப்ரல் 20 முதல் 2018 ஒகஸ்ட் 31 | கோப் பரிந்துரைகளின் விளைவாக, செப்டம்பர் 2018 முதல் இடைநிறுத்தப்பட்ட அதிகாரிக்கு வழங்கப்படும் பாதி சம்பளத்தை நிறுத்த ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், கோப் பரிந்துரையின் அடிப்படையில் அவர் தடை செய்யப்பட்ட காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட சம்பளத்தில் பாதியை திருப்பித் தருமாறு அந்த அதிகாரிக்குத் 2018 நவம்பர் 15 திகதி கடிதம் மூலம் | தாபனச் சட்டத்தின் துணைப்பிரிவு 31.11க்கு மாறாக செலுத்தப்பட்ட பணத்தை திரும்பப் பெற வேண்டும். |

வரை அவர் சார்பாக ஆணைக்குழுவிற்கு ஏற்பட்ட அரைமாத சம்பள செலவு ரூபா.5,212,815 ஆகும். 2018 செப்ரம்பர் 18 திகதி பொது நிர்வாகங்களுக்கான கோப் (ஊழீநு) குழுவின் பரிந்துரையின் படி ஆணைக்குழு சம்பளம் கொடுப்பதை நிறுத்திவிட்டு மொத்த ஊதியத்தை திரும்ப பெற ஏற்பாடு செய்ய வேண்டும். அதன்படி, 2018 செப்டெம்பர் முதல் அரைமாத சம்பளம் வழங்குவது நிறுத்தப்பட்டதுடன் மேலே குறிப்பிட்ட தொகையை 2018 நவம்பர் 15 திகதி கடிதம் மூலம் திருப்பி செலுத்துமாறு அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டது. இருப்பினும், 25 ஜூலை 2023 வரையிலும் ஆணைக்குழுவினால் இது அறவிடப்படவில்லை.

தெரிவிக்கப்பட்டுள்ளது. 2018 நவம்பர் 15 திகதி கடிதத்திற்கு அவர் பதிலளிக்காததால், மேலும் ஒரு நினைவூட்டல் 2019 ஆகஸ்ட் 26 அன்று அனுப்பப்பட்டது, இது 2019 ஆகஸ்ட் 27 அன்று அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது. இருப்பினும், அவர்இன்றுவரை பணத்தை வைப்புச் செய்யவில்லை. மேலும், இடைநீக்கம் செய்யப்பட்ட அதிகாரிக்கு எதிரதக நடாத்திய விசாரணைகள் தொடர்பாக ஆணைக்குழுவினால் நீதிமன்றத்தில் போடப்பட்ட வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பின்வரும் நிகழ்வுகளில் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பாதீட்டு மற்றும் உண்மையான செலவுப் விடயங்களுக்கு இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்பட்டன, இது பின்வரும் நிகழ்வுகளில் வரவு செலவுத் திட்ட நிர்வாகக் கட்டுப்பாட்டுக்கான ஒரு பயனுள்ள கருவியாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதைக் குறிக்கிறது. | **பொது விழிப்புணர்வு செலவு**<br>இது முக்கியமாக நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரமின்மையே, இது போன்ற வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளது. திட்டமிடப்பட்ட சில பொது விழிப்புணர்வு பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் ஆன்லைன் மூலம் நடத்தப்பட்டது மற்றும் அது செலவை வெகுவாகக் குறைத்தது.<br>**மூலதன சந்தை மேம்பாட்டு செலவு**<br>மதிப்பாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் சம்பந்தப்பட்ட | மாறுபாட்டைக் குறைக்க வேண்டும். |

| விடயம் | 2022 ஆண்டுக்கான பாதீடு | 2022 ஆண்டுக்கான உண்மையான செலவு | வேறுபாடு சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | % |
| பொது விழிப்புணர்வு | 64,750,000 | 10,278,137 | 84 |
| மூலதனச் சந்தை அபிவிருத்தி | 38,000,000 | 19,050,659 | 50 |
| கருத்தரங்கு கட்டணம் | 3,241,000 | 1,678,495 | 48 |
| வெளிநாட்டு பயிற்சி | 25,000,000 | 7,081,485 | 72 |
| மாநாடுகள் சந்தா, ஸ்பான்சர்ஷிப் மற்றும் | 8,450,000 | 3,363,804 | 60 |

| | | | | |
|---|---|---|---|---|
| உள்ளூர் பயிற்சி | | | | தரப்பினரால் கோரிக்கைகள் |
| EDP மற்றும் உபகரணங்கள் பராமரிப்பு | 30,382,698 | 21,744,149 | 28 | முன்வைக்கப்படாததால், முன்மொழியப்பட்ட தரகர் பின் அலுவலக அமைப்பில் செலவு ஏற்படாததால் உண்மையான மூலதனச் சந்தை மேம்பாட்டுச் செலவு கணிசமாகக் குறைக்கப்பட்டது.<br>**கருத்தரங்கு கட்டணம்**<br>மூலதன சந்தை கற்றல் தளம் மூலதனச் சந்தைகளைப் படிக்க ஆர்வமுள்ள மாணவர்களுக்கு கற்றல் வாய்ப்பை வழங்குகிறது. மீளாய்வாண்டில் நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமை காரணமாக வேலைத்திட்டங்களை நடத்த முடியவில்லை.<br>**வெளிநாட்டு பயிற்சி, மாநாடுகள், சந்தா, ஸ்பான்சர்ஷிப் மற்றும் உள்ளூர் பயிற்சி**<br>வெளிநாட்டுப் பயிற்சிக்கான செலவுகள் குறைவாக இருப்பதற்கு முக்கியக் காரணம் வெளிநாட்டுப் பயணங்களுக்கு விதிக்கப்பட்ட வரி அமைச்சகக் கட்டுப்பாடுகள்தான். கூடுதலாக, வழக்கமான வெளிநாட்டு பயிற்சி திட்டங்கள் மற்றும் மாநாடுகள் பல்வேறு காரணங்களால் செய்யப்படவில்லை. எவ்வாறாயினும், ஆணைக்குழுவின் ஊழியர்கள் சில ஆன்லைன் அமர்வுகளில் தங்கள் பணியிடங்களில் புதிய அறிவைப் பெறுவதற்காக |

கலந்துகொண்டனர்.

**EDP மற்றும் உபகரணங்கள் பராமரிப்பு**

வரவுசெலவுத் தொகையை விட உண்மையான தொகை குறைவாக உள்ளது, ஏனெனில் ஆணைக்குழு சில வழங்குநர்களுடன் பராமரிப்பு ஒப்பந்தங்களை பாதீட்டில் நிர்ணயித்ததை விட குறைந்த செலவில் மேற்கொள்ள முடிந்தது.